| உறுதிமொழி # 14: பயணிகளின் தேவை மற்றும் பின்னூட்டத்தின் அடிப்படையில் பொது பேருந்து போக்குவரத்தை மேம்படுத்தல். | | | |
|---|---|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | | | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு** | | |
| **உறுதிமொழி விளக்கம்** | | | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | பயணி கிலோமீற்றர் ஒன்றுக்கு சுமார் 45 சதம் என்ற தற்போதைய பங்குடன் பேருந்து போக்குவரத்தின் செல்வாக்கு நிறைந்ததாக பொதுப் போக்குவரத்து உள்ளது. பல வருடங்களாக, தமது நாளாந்த போக்குவரத்தில் சிறிதளவு முன்னேற்றங்களையே இலங்கை மக்கள் பெற்றிருக்கின்றனர்.மிகவும் மோசமான தரத்திலான போக்குவரத்து வசதிகள், போதியதற்ற போக்குவரத்து வசதிகள், பயணிகள் மற்றும் போக்குவரத்து அதிகார சபைகளுக்கு இடையில் போதியளவு இணைப்பு மற்றும் பங்களிப்பு இன்மையின் காரணமாக நாளாந்த போக்குவரத்தில் அவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.பேருந்து பயணிகளின் உரிமைகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுக்கான வழிகாட்டிகள் உள்ளன. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை சேவை வழங்குனர்களால் முறையாக பின்பற்றப்படவில்லை.<br>மாகாண மற்றும் தேசிய போக்குவரத்து அதிகார சபைகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் அரசுக்கு சொந்தமான 2,000 பேருந்துகள் மற்றும் தனியார் தொழில் முனைவோருக்குச் சொந்தமான 20,000 தனியார் பேருந்துகளால், பேருந்து போக்குவரத்து வழங்கப்படுகின்றது. | | |
| உறுதிமொழி என்ன? | குடிமக்களிடம் இருந்து பெறப்பட்ட பின்னூட்டம் தொடர்பில், அவர்களது கரிசனைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் பேருந்து போக்குவரத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவது சார்ந்ததே இந்த உறுதிமொழியாகும். | | |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | மாகாண மற்றும் தேசிய போக்குவரத்து அதிகார சபைகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் அரசுக்கு சொந்தமான 2,000 பேருந்துகள் மற்றும் தனியார் தொழில் முனைவோருக்குச் சொந்தமான 20,000 தனியார் பேருந்துகளால், பேருந்து போக்குவரத்து வழங்கப்படுகின்றது.கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பயணிகள் சங்கங்கள் உருவாக்கப்படும். இந்த பயணிகள் சங்கங்களின் ஊடாக பயணிகள் தேவைகள் பற்றிய அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கான முழுமையான ஆய்வு முன்னெடுக்கப்படும். அனைத்து பங்குதாரர்களினதும் பங்குபற்றலுடன் போக்குவரத்து சார் தரவுத் தளம் உருவாக்கப்பட்டு, பேணப்படும். | | |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | குடிமக்கள் தமது கரிசனைகளை மற்றும் கருத்துக்களை வழங்குவதற்கான ஒரு பொறியமைப்பாக **பொது மக்கள் பங்குபற்றலை** இந்த உறுதிமொழி விரிவாக்குகின்றது. அத்துடன், அவர்களது இன்னல்களையும் அடையாளப்படுத்துகின்றது. தகவல் சேகரிப்பு மற்றும் தொடர்பாடலுக்கான இணையத்தின் ஊடாக**பகிரங்கத் தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கானதொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தினை** அது முன்னிறுத்துகின்றது. | | |
| மேலதிக தகவல்: | 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது. நாட்டின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாகவும் அதற்கு ஆதரவளிக்கப்படுகின்றது. | | |
| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
| 1. 100 பயணிகள் சங்கங்களை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உருவாக்குவதன் மூலம் பரீட்சார்த்த செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். | | செப்ரம்பர் 2018 | டிசம்பர் 2018 |
| 2. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பயணிகள் சங்கங்களின் ஊடாக பயணிகளின் தேவைகள் பற்றிய அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கு முழுமையான ஆய்வு முன்னெடுக்கப்படும். | | ஜனவரி 2019 | மார்ச் 2019 |

<table>
<tr><td colspan="2">3. போக்குவரத்து சம்பந்தப்பட்ட தகவல் தரவுத்தளம் உருவாக்கப்பட்டு, போக்குவரத்து அமைச்சின் இணையத்தளம் ஊடாக அணுகும் வசதி வழங்கப்படும்.</td><td>ஏப்ரல் 2019</td><td>ஜூன் 2019</td></tr>
<tr><td colspan="2">4. பயணிகளிடமிருந்து போக்குவரத்து சேவை தொடர்பான பின்னூட்டம் பெறப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழவினால் ஒருங்கிணைத்தல் பொறியமைப்பு ஒன்று வடிவமைக்கப்படும். அத்துடன். இன்னல்களை கையாளும் பொறியமைப்பு ஒன்றும் அமைக்கப்படும்.</td><td>ஜூலை 2019</td><td>2020 முதல்</td></tr>
<tr><th colspan="4">தொடர்புத் தகவல்கள்</th></tr>
<tr><td colspan="2">நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்:</td><td colspan="2">Mr S S A Kularatne</td></tr>
<tr><td colspan="2">பதவி நிலை, திணைக்களம்</td><td colspan="2">Director (Planning), Ministry of Transport & Civil Aviation</td></tr>
<tr><td colspan="2">மின்னஞ்சல், தொலைபேசி</td><td colspan="2">Email – ssskule@gmail.com<br>TP – 011 2186182<br>Mobile – 071 8401838</td></tr>
<tr><td rowspan="2">சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள்</td><td>சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள்</td><td colspan="2">தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, மேல் மாகாண சபை</td></tr>
<tr><td>CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள்</td><td colspan="2">பயணிகள் சங்கங்கள் அல்லது பேருந்து உரிமையாளர்கள் சங்கம்</td></tr>
</table>